## 62. என்னை பெலப்படுத்தும்

### பல்லவி

என்னை பெலப்படுத்தும் (2)
என் பெலனாகிய கர்த்தாவே
என்னை திடப்படுத்தும் (2)
என் திடனாகிய கர்த்தாவே

### அனுபல்லவி

*மனிதர் உதவி எல்லாம் மாறி போகும்*
*உந்தன் உதவி என்றும் மாறாது*
*என் பெலனாகிய கர்த்தாவே*
*என் திடனாகிய கர்த்தாவே*

### சரணங்கள்

1. பட்டங்கள் பதவிகள் வந்துவிட்டால்
எல்லா நட்புகளும் கூட வந்துவிடும்
எல்லாவற்றையும் இழந்து நின்றால்
என்னோடு இருப்பவர் நீர் இயேசுவே
- என்னை

2. சாதனை வரும் போது சார்ந்திடுவார்
சோதனை வரும் போது சொல்லிகாட்டுவார்
எந்த நிலையிலும் நான் இருந்தால்
என்னோடு இருப்பவர் நீர் இயேசுவே
- என்னை

3. வாழ்வு வந்துவிட்டால் வாழ்த்திடுவார்
தாழ்வு வரும்போது தூற்றிடுவார்
எந்த நிலையிலும் நான் இருந்தால்
என்னோடு இருப்பவர் நீர் இயேசுவே
- என்னை

4. உயர்வு வரும்போது நினைத்திடுவார்
குறைவு வரும்போது குற்றம் சாட்டுவார்
எந்த நிலையில் நான் இருந்தால்
என்னோடு இருப்பவர் நீர் இயேசுவே
- என்னை